2017 ஜூலை 12]

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவையில் முன்வைத்த கருத்தை என்னுடைய கவனத்திற்கும் ஏற்கெனவே கொண்டு வந்திருந்தார்கள். அங்கே கோட்டாட்சியர் அவர்கள் விசாரணை செய்து கொண்டிருக்கிறார்கள். "இன்னொரு இடத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்ற முரண்பட்ட தகவலைச் சொல்கிறார்" என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். பொதுவாக இதுபோன்ற சடலங்கள் கிடைக்கிறபோது, உடனடியாக உடற்கூறு ஆய்வு செய்யப்பட்டு, இறப்புச் சான்றிதழ் உடனடியாக வழங்கப்படுகிறது. அங்கு சடலங்கள் கிடைக்காதபட்சத்தில், அங்கே வேலை பார்த்த பதிவுகளையெல்லாம் வைத்து, காவல் துறையினுடைய விசாரணை முழுமையாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. காவல் துறையினுடைய முழுமையான விசாரணைக்கு ஒரு குறிப்பிட்ட கால அளவு இருக்கிறது. இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும், இந்த அவையிலுள்ள மற்ற அனைவருக்கும் தெரியும். பொதுவாக இதுபோன்ற நேரங்களிலே, காவல் துறையினுடைய விசாரணை முடிவுற்ற பிறகு, இறந்தவர்களுடைய குடும்பத்தாருக்கு இறப்புச் சான்றிதழ் வழங்கப்படும். அதற்குப் பிறகு, அவர்களுடைய வாரிசுதார்களை, legal heirs–ஐ கோட்டாட்சியர் அவர்கள் உறுதி செய்ததற்குப் பிறகு, அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு நிச்சயமாக இழப்பீடு வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) மதுரை, கே. புதூர் சிட்கோ தொழிற்பேட்டையில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா.

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை, கே. புதூர் சிட்கோ தொழிற்பேட்டையில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது" குறித்த அவசரப் பொது

முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

சிட்கோ நிறுவனம், தமிழகத்தில் உள்ள 105 தொழிற்பேட்டைகளில் அரசால் அமைக்கப்பட்ட 35 தொழிற்பேட்டைகள் மற்றும் சிட்கோவால் அமைக்கப்பட்ட 70 தொழிற்பேட்டைகளையும் நிருவகித்து வருகிறது.

மதுரை மாவட்டம், மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதியில் சிட்கோ தொழிற்பேட்டை கே.புதூரில் சுமார் 56.05 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இத்தொழிற்பேட்டை 10 தொழில்மனைகள் மற்றும் 65 தொழிற்கூடங்களுடன் உருவாக்கப்பட்டு, அனைத்தும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. இத்தொழிற்பேட்டையின் சாலை வசதி, குடிநீர், மின் வசதி போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசின் குறு, சிறு நிறுவனங்கள்–குழும வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (MSE–CDP) *மத்திய அரசின் 60% பங்களிப்பு, மாநில அரசின் 30% பங்களிப்பு மற்றும் பயனீட்டாளர்களின் 10% பங்களிப்புடன் ரூ.375 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, கடந்த 14–2–2017 அன்று நடைபெற்ற 279–வது சிட்கோ குழுமக் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டு, அரசின் பரிந்துரையுடன் 21–4–2017 அன்று மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன், மதுரை, கே.புதூர் சிட்கோ தொழிற்பேட்டையின் சாலை, மின் வசதி, குடிநீர் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.375 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள்.

2017 ஜூலை 12]

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அளப்பரிய ஆளுமைத் திறனும், அரவணைக்கிற பண்பும், தாயுள்ளம் காட்டுகிற எங்கள் தாயினைப் போன்று இனி ஒருவர் இந்தப் பாரினில் பிறப்பது இல்லை என்கிற எதிர்பார்ப்பை (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்கு வழங்கிச் சென்றிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். போற்றுதலுக்குரிய நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து, சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில், அவருக்கும், அவர் சார்ந்த அமைச்சரவைக்கும் நன்றி சொல்கிறபோது, ஒரு தகவலைச் சொல்லியாக வேண்டும். இந்தக் கூட்டத் தொடரிலேயே விதி 110–ன்கீழும், மேலும், பல்வேறு அறிவிப்புகளின்கீழும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போற்றுதலுக்குரிய எங்கள் மதுரை மாவட்டத்திற்கு குறிப்பாக, நான் சார்ந்திருக்கிற மதுரை வடக்குத் தொகுதிக்குப் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள்.*

முற்பகல் 11–45

சிறப்புக்குரிய திட்டமாக 1,200 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே மதுரை மாநகருக்கு லோயர் கேம்ப்பிலிருந்து இராட்சத குழாய்மூலம் குடிநீர் வழங்குகின்ற திட்டத்தை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நூற்றாண்டிலே, மதுரை மைய பேருந்து நிலையத்திற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரைச் சூட்டியும், தொடர்ந்து மதுரை வடக்கு தொகுதியில் வருவாய்த் துறைமூலம் ரூபாய் 26.62 கோடி செலவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் துணைக் கட்டடங்கள் கட்டவும், அதோடு பள்ளிக் கல்வித் துறைமூலம் மதுரை உலக தமிழ்ச் சங்க வளாகத்தில் ரூபாய் 6 கோடி நிதியில் நூலகம் அமைத்திடவும், அதோடு சட்டக் கல்லூரியிலே சுமார் 7.5 கோடி ரூபாயிலே அரங்கமும், விடுதியும் கட்ட சட்டத் துறைமூலமும், அதோடு மட்டுமல்லாமல் 4.5 கோடி ரூபாயில் மதுரை பொதுப் பணித் துறை அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கும், மதுரை வடக்கு தொகுதியில் பல்வேறு வகையான திட்டங்களை அறிவித்து, இந்த நல்ல திட்டங்களை செயல்படுத்துகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்

[திரு. வி.வி. இராஜன் செல்லப்பா] [*2017 ஜுலை 12*

அருமை அண்ணன் மாண்புமிகு திரு. செங்கோட்டையன் அவர்களுக்கும், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கும், மரியாதைக்குரிய . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராஜன் செல்லப்பா, கவன ஈர்ப்பு கொண்டுவந்துவிட்டு, எல்லா அமைச்சர்களையும் பற்றிச் சொல்கிறீர்கள்.

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: விவர அறிக்கையைப் படித்தேன், விவர அறிக்கையில் மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் அவர்கள், அங்கே குழும கூட்டத்தின் வாயிலாக மதுரை, கே. புதூர் பகுதியில் அமைந்திருக்கின்ற சிட்கோவிற்கு 3.75 கோடி ரூபாய் திட்ட மதிப்பீடு செய்து, மத்திய அரசுக்கு அனுப்பியிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அதில் 60 விழுக்காடு மத்திய அரசும், 30 விழுக்காடு மாநில அரசும், 10 விழுக்காடு பயனாளிகள் பங்கு என்றும் சொல்லியிருக்கிறார்கள். மதுரையிலே அமைந்திருக்கின்ற சிட்கோ 1954 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1986 ஆம் ஆண்டிலிருந்து மாநகராட்சி அந்த சிட்கோ நிறுவனங்களிடம் வரி வசூல் செய்துகொண்டிருக்கிறது. ஆனால், 15 ஆண்டுகளாக அந்த மாநகராட்சி அவர்களிடம் ஒப்படைக்காத காரணத்தால், சிட்கோவிற்கு சாலை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி போதுமான அளவிலே இல்லை. சிட்கோவைச் சுற்றியிருக்கின்ற பகுதிகளில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், நகராட்சி நிருவாகத் துறைமூலம் மிகச் சிறப்பாக சாலை வசதி செய்யப்பட்டிருக்கிறது. மின் வசதி இருக்கிறது. குடிநீர் வசதி மதுரை மாநகராட்சியில் முழுமையாக இருக்கிறது. ஆனால், சிட்கோ பகுதி மட்டும் ஒரு ஒதுக்கப்பட்ட தீவாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மத்திய அரசுக்குத் தீர்மானம் அனுப்பி 3 மாதங்களாகிவிட்டன. தற்காலிகமாகக்கூட கொள்கை ரீதியிலாவது அதைச் சேர்க்க வேண்டும். 375 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கவேண்டும். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராஜன் செல்லப்பா, இப்படியெல்லாம் செய்தால், நான் எப்படிச் சபையை நடத்துவது? இப்படியெல்லாம் செய்வது சரியல்ல. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

2017 ஜூலை 12]

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கே. புதூரில், 1960 ஆம் ஆண்டு தொழில் வணிகத் துறையால் 56.05 ஏக்கர் நிலப்பரப்பில், 41 தொழிற் கூடங்கள் உருவாக்கப்பட்டன. 1974 ஆம் ஆண்டு இந்த அரசு தொழிற்பேட்டை சிட்கோ நிறுவனத்திற்கு பராமரிப்பிற்கும், மீதமுள்ள இடங்களை மேம்படுத்துவதற்கும் ஒப்படைக்கப்பட்டது. 1988 ஆம் ஆண்டு, மேலும் 14 தொழிற்கூடங்களும், 10 குறுந்தொழிற்கூடங்களும் உருவாக்கப்பட்டு, தொழில் முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்தொழிற்பேட்டையில் மொத்தமுள்ள 65 தொழிற்கூடங்களும், 10 தொழில் மனைகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டு தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

மதுரை மாவட்டம், கே. புதூர் சிட்கோ தொழிற்பேட்டையில் சாலை, தெரு விளக்கு, குடிநீர் வழங்கல், கழிவுநீரகற்றல் போன்ற உட்கட்டமைப்பு மற்றும் திறந்தவெளியிடங்களை மதுரை மாநகராட்சியிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை சிட்கோ எடுத்து வருகிறது. விவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது போன்று, இத்தொழிற்பேட்டையின் சாலை, குடிநீர், மின்சாரம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசின் குறு, சிறு நிறுவனங்கள் குழும வளர்ச்சித் திட்டத்தின்கீழ் M.S.M.E.–C.D.P. Scheme மத்திய அரசின் 60 விழுக்காடு நிதிப் பங்களிப்பு, மாநில அரசின் 30 விழுக்காடு நிதிப் பங்களிப்பு மற்றும் பயனீட்டாளர்களின் 10 விழுக்காடு நிதிப் பங்களிப்புடன் 375 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் பணிகளை மேம்படுத்த திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

சிட்கோ நிறுவனத்தின் 279–வது குழுமக் கூட்டத்தில் கடந்த 14–2–2017 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டு, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் 21–4–2017 அன்று மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 3 மாத காலத்திற்குள் எதிர்பார்க்கப்படும் மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன் மதுரை மாவட்டம், கே. புதூர் சிட்கோ தொழிற்பேட்டையில் 375 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சாலை, மின் வசதி, குடிநீர் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் சிட்கோ

TRUTH ALONE TRIUMPHS

நிறுவனத்தால் விரைந்து செயலாக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா, சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.*

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: *மேற்படி உட்கட்டமைப்பு வசதிகளை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் விரைவாக முடிப்பதற்கு உறுதியளித்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், வணக்கம்.*

4. வினா நேரத்தில் திரு. பி.கே. சேகர்பாபு மின் உயிரிழப்புக்கான நிவாரணம் குறித்து எழுப்பிய வினாவிற்கு மாண்புமிகு முதலமைச்சரின் விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் கேள்வி நேரத்தின்போது, ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார். பொது மக்கள் மின்சாரம் தாக்கி உயிரிழந்தால், மின்சார வாரியத்தால் மட்டும்தான் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது; முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுவதில்லை என்ற கருத்தைச் சொல்லியிருக்கின்றார். மின்சார வாரியத்தாலும் வழங்கப்படுகின்றது; முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்தும் மின்சாரம் தாக்கி உயிரிழந்தால் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சேகர்பாபு அவர்கள், கேள்வியைக் கேட்டுவிட்டு சென்றுவிட்டார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பாகப் பதில் சொல்லியிருக்கின்றார். அவர் அதனைக் கேட்பதற்கு இந்த அவையில் இல்லாமல் இருக்கிறார் அல்லவா? (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள்.*